**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15.09.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**காலநிலை மாற்றத்தை வெல்லும் நெல் சாகுபடிக்கான புதிய பாதை**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), கோயம்புத்தூர் மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த TEMASEK உயிர் அறிவியல் ஆய்வகம் (TLL) ஆகியவை இணைந்து, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பருத்திக்கோட்டை கிராமத்தில் காலநிலை மாற்றத்திற்கேற்ற நெல் சாகுபடிக்கான வயல் விழா மற்றும் விவசாயிகள்–விஞ்ஞானிகள் கலந்துரையாடல் கூட்டம் 15.09.2026 அன்று நடைபெற்றது.

பருத்திக்கோட்டை கிராமத்தில் சுமார் 250 ஏக்கர் (100 ஹெக்டேர்) பரப்பளவில், தாளடி (ஈரப்பருவம்) மற்றும் கோடை (வறண்ட பருவம்) என இரண்டு பருவங்களில் மேற்கொள்ளப்பட்ட பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வைக் குறைப்பதற்கான கள ஆய்வுகளின் முடிவுகளை விவசாயிகளிடம் எடுத்துரைக்கும் வகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

நெல் சாகுபடியில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைத்து, உற்பத்தித்திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தும் நோக்கில், பாய்ச்சலும்–காய்ச்சலும் நீர் பாசன முறை (Alternate Wetting and Drying – AWD), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் TLL பரிந்துரைக்கும் TLL உரக்கலவை, பருவத்திற்கேற்ற நெல் இரகங்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்–மீத்தேனைப் பயன்படுத்தும் நுண்ணுயிரிக் கலவை (Methanotrophic Consortium) ஆகிய ஒருங்கிணைந்த தொழில்நுட்பங்கள் இக்களப் பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், TEMASEK உயிர் அறிவியல் ஆய்வகப் பிரதிநிதிகள், வேளாண்மைத் துறை அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் பல்வேறு பங்குதாரர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் இயக்குநர் முனைவர் எஸ். கார்த்திகேயன் தொடங்கி வைத்தார். வரவேற்புரையை நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் பி. முரளி அர்த்தனாரி வழங்கினார். திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து முனைவர் வீ. தவமணி,

பேராசிரியர், விளக்கினார். திட்டத்தின் முக்கிய ஆய்வு முடிவுகள் குறித்து பேராசிரியர், முனைவர் எ. பரமேஸ்வரி, எடுத்துரைத்தார். விவசாயிகளுக்கான எதிர்கால செயல்திட்டங்கள் குறித்து இணைப் பேராசிரியர், முனைவர் பெ. கலைச்செல்வி, உரையாற்றினார்.

இத்திட்டத்திற்கு நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்கிய சிங்கப்பூரின் **TEMASEK Life Sciences Laboratory**–யைச் சேர்ந்த முனைவர் சீனிவாசன் ராமச்சந்திரன், முனைவர் கின்ஸ் வர்கீஸ் மற்றும் முனைவர் கோ புவே யீ ஆகியோர் கலந்து கொண்டு, நீரை சிக்கனமாகவும் முறையாகவும் பயன்படுத்துதல், மேம்படுத்தப்பட்ட TLL உர மேலாண்மை, பருவத்திற்கு ஏற்ற நெல் ரகங்களைத் தேர்வு செய்தல் மற்றும் மீத்தேனைப் பயன்படுத்தும் நுண்ணுயிரிக் கலவையைப் பயன்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

மேலும், திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திருமதி ஜி. வித்யா அவர்கள் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து, முனைவர் பொ. ஜானகி அவர்கள் மண்வள மேலாண்மை குறித்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் நிலையம் (KVK), நீடாமங்கலம் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வி. தனுஷ்கோடி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இக்கூட்டத்தில் கள ஆய்வின் குறிப்பிடத்தக்க முடிவுகள் எடுத்துரைக்கப்பட்டன. இரண்டு சாகுபடி பருவங்களில், 100 ஹெக்டேர் பரப்பளவில் 369.4 டன் $CO_2$ சமமான பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வு குறைக்கப்பட்டதுடன், வழக்கமான விவசாயிகள் கடைப்பிடிக்கும் சாகுபடி முறையுடன் ஒப்பிடும்போது நெல் மகசூல் 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

பாய்ச்சலும்–காய்ச்சலும் நீர்ப்பாசன முறை + TLL உரக் கலவை + மீத்தேனைப் பயன்படுத்தும் நுண்ணுயிரிக் கலவை + பருவத்திற்கேற்ற நெல் ரகங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பயன்படுத்தும் தொழில்நுட்பம், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நெல் சாகுபடிக்கு சிறந்த அணுகுமுறையாக இவ்வாய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த தொழில்நுட்பம், ஒருபுறம் நெல் உற்பத்தி மற்றும் விவசாயிகளின் லாபத்தை அதிகரிப்பதுடன், மறுபுறம் பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வைக் குறைப்பதன் மூலம் உலக வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றத்திலும் பங்களிக்கிறது. இதன் மூலம் நிலையான நெல் உற்பத்திக்கு இது சிறந்த வழிமுறையாக அமையும் என தெரிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு தலைமை உரையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் இயக்குநர் முனைவர் எஸ். கார்த்திகேயன் வழங்கினார். கள ஆய்வில் பங்கேற்ற விவசாயிகள் தங்களது அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்து கொண்டதுடன், இத்திட்டத்தின் மூலம் பயிர் மகசூல், விவசாயிகளின் பொருளாதார வருவாய் மற்றும் நிலையான வேளாண்மை நடைமுறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை எடுத்துரைத்தனர். நன்றியுரையை சுற்றுச்சூழல் அறிவியல் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் செ. பவுல் செபாஸ்டியன் வழங்கினார்.

காவிரி டெல்டா பகுதியில் காலநிலை மாற்றத்திற்கேற்ற நெல் சாகுபடி முறைகள் மூலம் ஒரே நேரத்தில் உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளின் பொருளாதார வருவாயை மேம்படுத்தவும், பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வைக் குறைக்கவும் முடியும் என்பது இக்களநாள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது. இது நிலையான வேளாண்மைக்கான நம்பிக்கைக்குரிய ஒரு புதிய பாதையாக அமையும்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***